**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :- 13 (2019) | இந்து நாகரிகம் I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி – I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. வேதங்களில் பாட்டுக்களை மட்டுமே கொண்டிருக்கும் வேதம்
    1) இருக்கு 2) யசுர் 3) சாமம் 4) அதர்வணம் 5) சுக்கிலயசூர்

02. ஆலய வழிபாட்டையும் அவை சார்ந்த அனுட்டானங்களையும் விதிகளாக விளக்குவதனால் சிவாகமங்களை
    1) சிரௌதம் 2) சுபதந்திரம் 3) சாத்திரங்கள் 4) பிரமாணம் 5) விதிப்படலம்

03. வெண்மையான அனந்தசயனத்திலே யோக நித்திரையில் காணப்படுகின்றவர்
    1) சிவன் 2) விஷ்ணு 3) பிரம்மா 4) உருத்திரன் 5) இந்திரன்

04. "சிற்பங்களால் இழைக்கப்பட்ட ஒரே சோழர் வளாகம்" என்று வருணிக்கப்படும் ஆலயம்.
    1) திரிபுவனேஸ்வரம் 2) சிதம்பரம்
    3) கங்கை கொண்ட சோழேஸ்வரம் 4) தஞ்சைப் பெருங்கோயில் 5) ஐராவதேஸ்வரம்

05. "கடாரம் வென்றான்" எனும் பட்டத்துக்குரியவன்
    1) சுவாமி விவேகானந்தர் 2) நந்திவர்மன் 3) இராசசிம்மன்
    4) இராசேந்திரன் 5) மகேந்திரவர்மன்

06. பல்லவர் காலத்தில் தமிழகத்தில் வைதிகக் கல்வியைப் போதித்த கல்வி நிறுவனம்
    1) திண்ணைப் பள்ளி 2) காஞ்சி கடிகைதானம்
    3) ஆச்சிரமங்கள் 4) அரண்மனைகள் 5) குருகுலங்கள்

07. விஜயநகர நாயக்கர் காலத்தில் வேதாந்த சித்தாந்த சமரசத்தை வலியுறுத்தியவர்
    1) அருணகிரிநாதர் 2) சிவஞான முனிவர் 3) தாயுமானவர்
    4) கச்சியப்பமுனிவர் 5) கிருஷ்ணதேவராயர்

08. பிரம்மம் ஒன்றே அது பலவாகத் தோற்றம் பெறுவதற்கு சங்கரர் கூறும் காரணம்.
    1) அவித்தை 2) ஆணவம் 3) புலனறிவு 4) மனம் 5) கன்மம்

09. பகவத்கீதை கூறும் கர்மயோகத்தின் பிரதான உபதேசம்
    1) துறவு 2) இல்லறவாழ்வு 3) கன்மம்
    4) பிரம்மச்சரியம் 5) செயலில் துறவு

agaram.lk

10. ஊடக வெளிப்புறச் சாதனங்களில் ஒன்று
1) பொது விவாதம் 2) பிரசங்கம் 3) மகா நாடுகள்
4) சிற்பங்கள் 5) பொதுக்கூட்டம்

11. இந்திய அறுவைச் சிகிச்சையின் தந்தை என போற்றப்படுபவர்
1) வியாசர் 2) தன்வந்திரி 3) ஆத்திரேயர்
4) சரகர் 5) சுஸ்ருதர்

12. விலங்குகள் பறவைகள் போன்ற உயிரினங்களின் பொருட்டுச் செய்யப்படும் வழிபாடு
1) பூதயக்ஞம் 2) தேவயக்ஞம் 3) மானிடயக்ஞம்
4) பிரமயக்ஞம் 5) பிதிர்யக்ஞம்

13. ''நானும் அது, நீயும் அது, எல்லாம் ஒன்று'' என்று அனைவரையும் சம நோக்குடன் நோக்கும் உயர் நிலை அறத்தைப் போதிப்பது.
1) வேதங்கள் 2) தர்மசாத்திரங்கள் 3) உபநிடதங்கள்
4) இதிகாசங்கள் 5) பகவத்கீதை

14. நடராசர் வடிவம் உணர்த்தும் தத்துவம்
1) ஆன்ம தத்துவம் 2) ஐந்தொழில் 3) குரு தத்துவம்
4) சிவ தத்துவம் 5) அகந்தையுடையவர்கள் இறைவனை அடைய முடியாது

15. உண்மைப்பொருள் பற்றிய விசாரணைகளை எடுத்துரைப்பது.
1) சங்கிதை 2) ஆரணியகம் 3) பிராமணம்
4) உபநிடதம் 5) புராணம்

agaram.lk

16. உலக ஒழுங்கைப் பேணுபவனாகவும் மனிதர்களின் ஒழுக்கத்தைக் கண்காணிப்பவனாகவும் போற்றப்படுபவன்.
1) இந்திரன் 2) சோமன் 3) உருத்திரன்
4) பிரகஸ்பதி 5) ரிதஸ்வான்

17. இவ் உலகத் தோற்றத்துக்குரிய முதல் காரணமாக அமைவது
1) இறைவன் 2) மாயை 3) சக்தி 4) கன்மம் 5) பிரம்மா

18. ஆகமங்களை இறைவன் மகேந்திர மலையில் நின்று அருளினார் என குறிப்பிடுபவர்.
1) திருமூலர் 2) பரத்துவாசர் 3) வியாசர்
4) மாணிக்கவாசகர் 5) வசிட்டர்

19. தற்கால சீதா வழிபாடு, ஆஞ்சநேய வழிபாட்டுகளுக்கு ஆதாரமாக அமைந்தது.
1) இராமாயணம் 2) மகாபாரதம் 3) மான்மியங்கள்
4) தல புராணங்கள் 5)சமய மரபுகள்

20. பாவச் செயல்கள் அதன் பிராயச்சித்தம் பற்றிக் கூறும் புராணம்
1) ஸ்கந்த புராணம் 2) சிவ புராணம் 3) கருட புராணம்
4) சூரிய புராணம் 5) அக்கினி புராணம்

21. ஆரிய திராவிட இணைப்பைக் காட்டும் சங்ககால வழிபாடு
1) கொற்றவை வழிபாடு 2) முருக வழிபாடு 3) இந்திர வழிபாடு
4) சிவ வழிபாடு 5) வருண வழிபாடு

22. பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களும் உண்டு என்பதற்கு ஏதுக்கள் கூறும் சிவஞான போத இயல்
1) பிரமாண இயல் 2) இலக்கண இயல் 3) சாதன இயல்
4) பயன் இயல் 5) பொது இயல்

23. சைவ சித்தாந்தம் குறிப்பிடும் உடம்பின் தத்துவங்கள்
1) 24 2) 07 3) 05 4) 18 5) 36

24. வீரசைவக் கோட்பாட்டைக் கூறுகின்ற பிரதான நூல்
1) பிரம்ம புராணம் 2) அக்கினி புராணம் 3) கந்த புராணம்
4) பசவ புராணம் 5) விஷ்ணு சித்தீயம்

25. "வானவன் மாதேவீஸ்வரம்" எந்தக்காலத்துக்குரியது.
1) ஆரியச்சக்கரவர்த்திக் காலம் 2) சங்க காலம் 3) பொலனறுவைக்காலம்
4) நாயக்கர் காலம் 5) அனுராதபுரக்காலம்

26. வியாசர், இராமர் வழிபட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயம்.
1) கொக்கட்டிச்சோலை 2) திருக்கேதீஸ்வரம் 3) நகுலேஸ்வரம்
4) முன்னேஸ்வரம் 5) திருக்கோணேஸ்வரம்

agaram.lk

27. இந்து நாகரிகத்துறையின் கற்கை நெறியில் இந்து நாகரிகத்தையும் ஒரு பாடமாக கற்பிப்பதற்குரிய பாடத்தினை வகுத்தவர்
1) பேராசிரியர் கோபாலகருஷ்ண ஐயர் 2) பேராசிரியர் வி.சிவச்சாமி
3) பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் 4) பேராசிரியர் சி.பத்மநாதன்
5) பேராசிரியர் மா.வேதநாதன்

28. "இந்து சாதனம்" எனும் பத்திரிகையை வெளியிடும் நிறுவனம்
1) சைவ பரிபாலன சபை 2) விவேகானந்த சபை
3) இராமகிருஷ்ணமிஷன் 4) சைவ வித்தியா விருத்திச்சங்கம்
5) அகில இலங்கை இந்து மாமன்றம்

29. வேதாந்தக் கோட்பாட்டை நடைமுறை வாழ்வியலுடன் இணைத்துக் காட்டியவர்
1) சுவாமிவிவேகானந்தர் 2) இராமகிருஷ்ண பரமஹம்சர்
3) சுவாமிவிபுலானந்தர் 4) ஆறுமுகநாவலர்
5) கா.அருணாச்சலதேசிகர்

30. ஆரியசமாசம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
1) 1828 2) 1772 3) 1815 4) 1823 5) 1875

31. அடிமுடி தேடிய புராணக் கதையுடன் தொடர்புபட்ட மூர்த்தம்.
1) இலிங்கோற்பவர் மூர்த்தம் 2) திரிபுராந்தகர் மூர்த்தம் 3) நடராஜ மூர்த்தம்
4) சோமஸ்கந்த மூர்த்தம் 5) தட்சிணாமூர்த்தி மூர்த்தம்

32. இன, மத, பேதங்களுக்கு அப்பால் உறவுகள் அனைத்தையும் துறந்து விஷ்ணு ஒருவரையே தஞ்சம் என நினைத்து வாழ்ந்தவர்.
1) மீராபாய் 2) ஸ்ரீசைதன்யர் 3) கபீர்தாஸர்
4) ஆண்டாள் 5) இராமானந்தர்

33. சட உலக தோற்றத்திற்கு அடிப்படை பிரகிருதி என குறிப்பிட்டவர்
1) மத்துவர் 2) ஸ்ரீகண்டர் 3) சங்கரர் 4) பரஞ்சோதி 5) இராமானுயர்

34. வாழ்க்கையின் முற்பகுதியிலே உலக இன்பங்களை இறைவழி நின்று அனுபவித்து பிற்பகுதியிலே பற்றினைத்துறந்து பரஞானம் பெற்று ஞானியாக வாழவேண்டும் என்பதை உணர்த்துவது.
1) புருடாத்தங்கள் 2) தர்மசாத்திரங்கள் 3) வருணதர்மங்கள்
4) ஸ்மிருதிகள் 5) ஆச்சிரமதர்மங்கள்

35. நிலையாக ஓரிடத்தில் நிறுவப்படும் விக்கிரகங்கள்
1) சல விக்கிரகம் 2) அமர்ந்த விக்கிரகம் 3) நிற்கும் விக்கிரகம்
4) அசல விக்கிரகம் 5) சலாசல விக்கிரகம்

36. சங்கரர் குறிப்பிடும் அநிர்வசனீயம் எனப்படுவது
1) பிரமம் 2) மாயை 3) ஆன்மா 4) முத்தி 5) உலகம்

agaram.lk

37. பிரமசூத்திரம், பகவத்கீதை, உபநிடதம் ஆகிய நூல்களுக்கு வைணவ சித்தாந்த நோக்கில் உரை எழுதியவர்
1) மத்துவர் 2) இராமனுஜர் 3) ஸ்ரீகண்டர் 4) சங்கரர் 5) வல்லபர்

38. கிரியைகள் மூலமாக வாழ்வில் முழுமை பெறமுடியாத நிலையில் ஏற்பட்ட ஆன்மீகத்தேடலாக எழுந்தவை.
1) உபநிடதங்கள் 2) இதிகாசங்கள் 3) உபநிடதங்கள்
4) வேதாந்தங்கள் 5) புராணங்கள்

39. சற்புத்திர மார்க்க நெறியில் நின்று இறை இன்பம் பெற்ற நாயனார்.
1) திருநாவுக்கரசர் 2) மருள் நீக்கியார் 3) மாணிக்கவாசகர்
4) திருஞானசம்பந்தர் 5) சுந்தரமூர்த்தி நாயனார்

40. ஆறுமுக நாவலரினால் புனர்த்தானம் செய்யப்பட்ட ஆலயம்
1) திருக்கேதீஸ்வரம் 2) கதிர்காமம் 3) நல்லூர்
4) முன்னேஸ்வரம் 5) நகுலேஸ்வரம்

❖ **இலக்கம் 41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குரிய பொருத்தமானவற்றை அட்டவணையிலிருந்து தெரிவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>சங்கரர் | B<br>வசிட்டர் | C<br>ஆறுமுகநாவலர் | D<br>அபரவித்யா | E<br>தேகி |
| F<br>சுப்பிரபேதம் | G<br>மத்துவர் | H<br>ஜீவன் | I<br>வாமதேவர் | J<br>அத்திரி |
| K<br>பசு | L<br>வச்சிரதண்டம் | M<br>இராமானுஜர் | N<br>பரமவித்யா | O<br>ஸ்நாகதன் |
| P<br>உண்மைபேசு | Q<br>சதசத்து | R<br>திருக்கேதீஸ்வரம் | S<br>பரத்துவாசர் | T<br>நீலகண்ட சாஸ்திரி |

41. பிரம சூத்திரத்துக்கு உரைகளை எழுதியவர்கள் அடங்கும் தொகுதி
 1) C, A, O, S 2) A, G, M, T 3) C, I, S, T
 4) B, G, O, S 5) A, C, I, S

42. வேதகால பாடல்களை இயற்றியோர் தொகுதி
 1) A, B, C, I 2) G, I, O, T 3) B, G, M, O
 4) E, J, M, T 5) B, I, J, S

43. ஐந்தாம் சமயக்குரவரோடு தொடர்புபட்ட தொகுதி
 1) D, N, D, T 2) F, N, O, S 3) C, F, L, R
 4) A, G, M, S 5) G, M, S, T

44. சைவசித்தாந்தம் குறிப்பிடும் ஆன்மா பற்றிய தொகுதி
 1) E, H, K, Q 2) P, Q, S, T 3) E, H, N, T
 4) B, G, L, Q 5) C, H, M, R

45. குருகுலக்கல்வியோடு தொடர்புபட்ட தொகுதி
 1) A, F, K, P 2) C, H, M, R 3) E, J, O, T
 4) D, N, O, P 5) C, H, R, T

❖ **46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

46. சைவப்புலவர் கா.அருணாசல தேசிகர்
 1) சுதேச இயக்கத்தின் பங்காளராக விளங்கினார்
 2) சுவாமி விவேகானந்தருடன் இணைந்து செயற்பட்டவர்
 3) பிரசங்கம் செய்தவர்
 4) சமய போதனைகளை மேற்கொண்டவர்
 5) சைவ சமய நூல்களை எழுதினார்

agaram.lk

47. மத்துவரின் துவைத கோட்பாட்டில் முத்திப ற்றிய சிந்தனை

1) ஆன்மா தனது முயற்சியால் நேரே விடுதலை பெற முடியாது.
2) ஞானம், பக்தி என்பன மோட்சத்துக்குரிய வழிகளாகும்.
3) முத்தி நிலை ஆன்மா பிரமத்துடன் இரண்டறக் கலப்பதில்லை
4) ஆன்மா பந்தத்தாற் கட்டப்பட்டிருப்பதால் பதியின் உண்மைத்தன்மையினை உணர்வதில்லை.
5) ஆன்மா முத்தி நிலையில் பேரின்பத்தை அனுபவிப்பதில்லை.

48. வடமொழிப் புராணங்கள்

1) பௌராணிகர்களால் தோற்றுவிக்கப்பட்டது.
2) குப்தர் காலத்தில் தோற்றம் பெற்றது.
3) சிவ புராணங்கள் 18 ஆகும்.
4) தச லட்சணங்கள் பற்றி விளக்குகின்றது.
5) தவம், விரதம், வேள்ளி, மூர்த்தி, தீர்த்தம் பற்றியும் விளக்குகின்றது.

49. பிரம சமாஜத்தின் பணிகள்

1) விக்கிரக ஆராதணை என்ற நூலில் உருவ வழிபாட்டினை வலியுறுத்தியமை.
2) வேதாந்தக் கல்வியை பரப்பியமை.
3) மேலைத்தேயக் கல்வி மரபில் ஒளிபெற வேண்டியமை.
4) விதவைகள் மறுமணம், பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தமை.
5) உருவ வழிபாட்டினை எதிர்த்தமை.

50. சிவாகமங்களில் சைவசித்தாந்த சிந்தனைகள்

1) முப்பொருள் உண்மை பற்றி கூறுகின்றது.
2) அட்டாங்க யோகங்கள் பற்றி விளக்குகின்றது.
3) ஞான பாதத்தில் அதிகமான தத்துவக் கருத்துக்கள் காணப்படுகின்றன.
4) விஷ்வகர்மன் பிரபஞ்சப் படைப்புக்கடவுளாக விளங்குகின்றார்.
5) சுத்தாத்துவித முத்திப ற்றியும் கூறுகின்றது.

(50x2=100 புள்ளிகள்)

agaram.lk

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :- 13 (2019) | இந்து நாகரிகம் II | நேரம் :- மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம் |
|---|---|---|

## பகுதி – II

- ❖ பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும்
- ❖ பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01) இந்து நாகரிக வரலாற்றில் வேதங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

அ) வழிபாட்டு முறைகள்
ஆ) தத்துவ சிந்தனைகள்
இ) தர்மங்கள்
ஈ) முக்கியத்துவம்

(5x4=20 புள்ளிகள்)

agaram.lk

02) இந்து சமுதாயத்தில் மகாபாரதம் பெறும் சிறப்பினை மேல்வரும் விடயங்களில் விளக்குக.

அ) இலக்கிய மரபு
ஆ) சமுதாய வழமைகள்
இ) சமய நெறிகள்
ஈ) தர்ம சிந்தனைகள்

(5x4=20 புள்ளிகள்)

03) இந்து சமுதாய வளர்ச்சியில் இந்துக்கல்விப் பாரம்பரியம் பெறும் இடத்தினை மேல்வரும் விடயங்களில் விளக்குக.

அ) தென்னக இந்துக் கல்விப் பாரம்பரியம்
ஆ) புராதன இந்துக் கல்வியின் நோக்கம்
இ) புராதன இந்துக் கல்விக் கோட்பாடுகள்
ஈ) அரண்மனைக் கல்வி மரபுகள்

(5x4=20 புள்ளிகள்)

# பகுதி II

*04) சங்கருடைய வேதாந்தக் கோட்பாட்டின் பிரதான அம்சங்களை விளக்கிக் கூறுக.*

*(20 புள்ளிகள்)*

*05) சைவ சித்தாந்தத்தில் பதி பற்றிய கருத்துக்களை விளக்கி ஆராய்க.*

*(20 புள்ளிகள்)*

*06) இந்து சமூக சீர்திருத்த இயக்கங்களில் ஒன்றாகியஆரிய சமாஜத்தின் பணிகளை விளக்குக.*

*(20 புள்ளிகள்)*

*07) பல்லவர் காலக்கட்டடக்கலை வளர்ச்சியில் மன்னர்களின் பங்களிப்பை விளக்குக.*

*(20 புள்ளிகள்)*

*08) "இந்து விக்கிரகக் கலையின் சிறப்பினை உலகறியச் செய்தது நடராஜ மூர்த்தமே" ஆராய்க.*

*(20 புள்ளிகள்)*

agaram.lk